ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதிமாவத்தை,கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.06.22 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 ஏப்பிறல்

### முக்கிய பண்புகள்

*2020 ஏப்பிறலில் இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் கொவிட்-19 தொற்றுடன் தொடர்பான பொருளாதார இடையூறுகளினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நாட்டில் பகுதியளவிலான முடக்கம் விதிக்கப்பட்டமையானது 2020 ஏப்பிறலில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் துறையினைக் குறிப்பிடத்தக்களவில் பாதித்த வேளையில், சுற்றுலாத் தொழில் துறையினை முழுமையாகவே இழுத்து மூடியிருக்கிறது. இறக்குமதிகளுடன் தொடர்பான நிரம்பல் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாகவும் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினாலும் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. சில புலம்பெயர் வேலையாட்கள் முடக்கத்திற்கு முன்னதாகவே நாட்டிற்கு மீண்டும் வந்துவிட்டமையினதும் வெளிநாட்டிலுள்ள சில புலம்பெயர் வேலையாட்களினால் எதிர்நோக்கப்பட்ட சம்பளக் குறைப்பு மற்றும் தொழில் குறைப்பினதும் காரணமாக இம்மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. நிதியியல் கணக்கில், அரச பிணையங்கள் சந்தையில் தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்ட வேளையில், கொழும்புப் பங்குச் சந்தை 2020 ஏப்பிறல் முழுவதும் மூடப்பட்டிருந்தது. அதிகரித்த நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான உட்பாய்ச்சல்கள் போதாமல் இருந்தமை என்பனவற்றின் காரணமாக 2020 ஏப்பிறலின் முன்னரைப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக, கணிசமானளவிற்கு தேய்வடைந்தது. எனினும், சந்தை மனோபாவங்கள் மேம்பாடுற்றமையின் காரணமாக மாதத்தின் பின்னரைப்பகுதியிலிருந்து ரூபா படிப்படியாக உறுதியடைந்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட செலாவணி வீத உயர்வுகள் தேய்வினை ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3 சதவீதத்திற்கும் குறையாமல் மட்டுப்படுத்துவதற்கு உதவியுள்ளன.*




இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | ஏப் 2019 ஐ.அ.டொ மில் | ஏப் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன- ஏப் 2019 ஐ.அ.டொ மில் | சன- ஏப் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 798 | 282 | -64.6 | 3,954 | 2,932 | -25.9 |
| இறக்குமதிகள் | 1,596 | 1,123 | -29.6 | 6,412 | 5,625 | -12.3 |
| வர்த்தகமீதி (தேறிய) | -797 | -840 | | -2,458 | -2,693 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 315 (ஆ) | - | -100.0 | 1,711 (ஆ) | 956 (இ) | -44.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 554 | 375 | -32.3 | 2,171 | 1,975 | -9.0 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | 10 | - | | -24 | -28 | |
| அரசாங்கத்திற்கானஉட்பாய்ச்சல் (மொத்தம்) | 135 | 138 | | 3,239 | 961 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 29 | 1 | | 267 | 84 | |
| நீண்ட காலக் கடன்கள் | 106 | 137 | | 572 | 877 | |
| திரண்ட நிலுவை | | | | 285 | -290 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- இறக்குமதிகள் வீழ்ச்சியைக் காட்டிலும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி விஞ்சிக் காணப்பட்டமையினால், **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 ஏப்பிறலின் ஐ.அ.டொலர் 797 மில்லியனிலிருந்து 2020 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 840 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை, 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,458 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,693 மில்லியனுக்கு விரிவடைந்தது. 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.
- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதம் 2020 ஏப்பிறலில் (ஆண்டிற்கு ஆண்டு) 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க விரைந்த வேகத்தில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாக அமைந்தது.

வரைபடம்: 1 : 2020 சனவரி – ஏப்பிறலில் வர்த்தகப் பற்றாக்குறையின் அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)

ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஆ.ஆ)




இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (ஆ.ஆ)




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019– 2020)




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில், 2020 ஏப்பிறலில் **வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஐ.அ.டொலர் 282 மில்லியனுக்கு 64.6 சதவீதத்தினால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்து 2020 மாச்சில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு தொடர்ந்தமைக்கு அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளும் கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தமையே காரணமாகும். உள்நாட்டு உற்பத்திச் செய்முறைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமையின் விளைவாக ஏற்றுமதிகளுடன் தொடர்பான பணிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள் மற்றும் கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிரம்பல் மற்றும் கேள்விச் சங்கிலிகள் இரண்டிற்கும் ஏற்பட்ட இடையூறுகள் என்பன ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.
- மூன்று முக்கிய ஏற்றுமதித் துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் கனிமப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்தன. புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், தேயிலை, கடலுணவு, பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள் போன்ற முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன.
- 2020 ஏப்பிறலில், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் ஆகிய இரண்டும் முறையே 50.6 சதவீதத்தினாலும் 28.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவுகளும் குறைந்த விலைகளுமே தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஏப்பிறல் 2019 ஐ.அ.டொ மில் | ஏப்பிறல் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-ஏப் 2019 ஐ.அ.டொ மில் | சன-ஏப் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **617.6** | **160.8** | **-74.0** | **3,111.9** | **2,294.9** | **-26.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 29.3 | 16.6 | -43.3 | 165.2 | 126.9 | -23.2 |
| விலங்குத்தீன் | 5.1 | 4.3 | -15.2 | 40.4 | 29.7 | -26.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 357.6 | 65.2 | -81.8 | 1,831.8 | 1,320.1 | -27.9 |
| இதில் ஆடைகள் | 333.7 | 58.1 | -82.6 | 1,707.0 | 1,222.0 | -28.4 |
| புடவைகள் | 16.9 | 5.1 | -69.6 | 91.3 | 70.1 | -23.3 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.0 | 1.9 | -72.3 | 33.5 | 28.0 | -16.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 52.9 | 24.2 | -54.2 | 285.8 | 220.3 | -22.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 23.0 | 0.1 | -99.4 | 106.3 | 54.8 | -48.5 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 26.0 | 9.0 | -65.4 | 134.1 | 95.4 | -28.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.6 | 1.4 | -79.3 | 32.7 | 19.1 | -41.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 42.9 | 14.5 | -66.1 | 166.9 | 192.2 | 15.1 |
| இரசாயன உற்பத்திகள் | 12.6 | 7.7 | -39.2 | 57.1 | 45.4 | -20.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 8.8 | 2.8 | -68.6 | 48.9 | 29.3 | -40.2 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 8.4 | 1.0 | -87.7 | 19.5 | 11.7 | -39.8 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 7.5 | 1.0 | -86.2 | 40.7 | 17.6 | -56.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.5 | 1.3 | -76.0 | 24.6 | 16.3 | -33.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 12.2 | 6.2 | -49.0 | 59.4 | 37.7 | -36.4 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.1 | 0.3 | -83.4 | 9.2 | 6.4 | -30.0 |
| ஏனையவை | 17.1 | 5.0 | -70.8 | 89.4 | 71.8 | -19.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **177.0** | **120.3** | **-32.0** | **824.7** | **626.8** | **-24.0** |
| தேயிலை | 99.0 | 78.4 | -20.8 | 446.2 | 348.4 | -21.9 |
| இறப்பர் | 2.5 | 1.6 | -37.4 | 10.9 | 8.8 | -19.4 |
| தெங்கு | 23.9 | 14.3 | -40.1 | 111.7 | 84.7 | -24.2 |
| வாசனைத்திரவியங்கள் | 15.8 | 12.0 | -23.9 | 96.4 | 63.1 | -34.6 |
| காய்கறிகள் | 2.7 | 1.2 | -54.8 | 10.8 | 8.1 | -25.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.0 | 1.6 | -46.4 | 10.4 | 6.0 | -42.5 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 7.4 | 4.9 | -33.4 | 34.6 | 44.5 | 28.6 |
| கடலுணவு | 22.7 | 6.3 | -72.3 | 103.6 | 63.3 | -38.9 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.3** | **1.0** | **-57.5** | **11.3** | **5.9** | **-48.3** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.3** | **0.3** | **-79.9** | **6.3** | **4.4** | **-29.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **798.1** | **282.3** | **-64.6** | **3,954.2** | **2,932.0** | **-25.9** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்,இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2020 ஏப்பிறலில் **வணிகப்பொருள் இறக்குமதிகள்** மீதானம் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,123 மில்லியனுக்கு 29.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே முக்கியமாக வழிவகுத்தது. கொவிட்-19 தொற்றின் காரணமாக தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கான வசதிப்படுத்தலை இடைநிறுத்துவது உட்பட, 2020 மாச்சிலும் ஏப்பிறலிலும் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகளும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகளில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினமும் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்ததுடன் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் குறைந்த இறக்குமதிகளே இதற்கு வழிவகுத்தது. இலங்கைச் சுங்கத்தினால் பின்பற்றப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதி தீர்ப்பனவுச் செய்முறை, இன்றியமையாத நுகர்வுப்பொருட்களுக்கான முன்னுரிமை, ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமையின் காரணமாக ஏனைய இறக்குமதியுடன் தொடர்பான பணிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், உலகளாவிய நிரம்பல் மற்றும் வசதி ஏற்பாட்டுச் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள், கொவிட்-19 பரவலைத் தொடர்ந்து குறைவடைந்த பண்ட விலைகள் என்பன இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட இக்கணிசமான வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

- இதன்படி, அனைத்து முக்கிய இறக்குமதித் துறைகளான நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் 2020 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன. மசகெண்ணெய் (ஏப்பிறலில் சராசரியாக இறக்குமதி விலை பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 19.56 காணப்பட்டது), சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் குறைந்த சராசரி விலைகளும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் மசகெண்ணெயின் குறைந்த இறக்குமதி அளவுகளும் எரிபொருள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக வகைகூறின. பொறி மற்றும் கருவிகள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள், கட்டட மூலப்பொருட்கள், கோதுமை மற்றும் சோளம், கனிம உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. 2020 மாச்சு/ ஏப்பிறல் காலப்பகுதியில் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு முக்கியமாக உட்பட்டிருந்த தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், ஆடைகள் மற்றும் அவற்றின் துணைப்பொருட்கள், வீட்டுச்சாதனங்கள் போன்ற உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினமும் 2020 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஏப்பிறலில் தனியாள் ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டமைக்கு நாட்டில் காணப்பட்ட கொவிட்-19 பரவலின் காரணமாக பணிகளில் ஏற்பட்ட தடங்கல்களின் காரணமாக சுங்கத்தில் தேங்கிக் காணப்பட்ட நிலுவையிலிருந்த வேலைகள் இம்மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டமையே காரணமாகும். மேலும், நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு காய்கறிகள், கடலுணவு மற்றும் வாசனைத்திரவியங்கள் போன்ற அத்தியாவசியப்பொருட்கள் வழிவகுத்த வேளையில் இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட அடிப்படை உலோகங்கள், வளமாக்கி, வேளாண்மை உள்ளீடுகள் மற்றும் உணவுத் தயாரிப்புக்களின் இறக்குமதிகள் மீதான செலவினமும் அதிகரித்தது.

- 2020 ஏப்பிறலில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் இரண்டும் 2020 ஏப்பிறலில் முறையே 17.8 சதவீதத்தினாலும் 14.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவுகள் மற்றும் குறைந்த விலைகளும் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | ஏப்பிறல் 2019 ஐ.அ.டொ மில் | ஏப்பிறல் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-ஏப் 2019 ஐ.அ.டொ மில் | சன-ஏப் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **308.1** | **302.5** | **-1.8** | **1,220.4** | **1,268.6** | **4.0** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 122.5 | 136.8 | 11.7 | 457.4 | 563.2 | 23.1 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.2 | 2.0 | -10.6 | 11.9 | 13.9 | 17.3 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 39.3 | 27.3 | -30.6 | 103.9 | 124.1 | 19.5 |
| காய்கறிகள் | 20.9 | 40.9 | 95.9 | 92.6 | 145.6 | 57.3 |
| கடலுணவு | 16.0 | 18.7 | 16.7 | 66.3 | 65.3 | -1.5 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 15.2 | 15.3 | 0.4 | 64.1 | 88.3 | 37.9 |
| வாசனைத்திரவியங்கள் | 7.4 | 15.3 | 108.0 | 36.5 | 50.2 | 37.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 21.6 | 17.4 | -19.3 | 82.3 | 75.8 | -7.9 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 185.6 | 165.7 | -10.7 | 762.9 | 705.4 | -7.5 |
| தனியாள் ஊர்திகள் | 47.6 | 60.4 | 26.9 | 217.4 | 216.8 | -0.3 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 39.8 | 39.4 | -0.9 | 161.6 | 164.8 | 2.0 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 21.5 | 16.0 | -25.9 | 71.7 | 66.5 | -7.2 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 19.9 | 12.2 | -39.0 | 95.0 | 85.3 | -10.2 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 22.5 | 14.3 | -36.5 | 84.2 | 63.0 | -25.2 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் | 12.7 | 10.4 | -18.0 | 48.7 | 48.3 | -0.8 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 21.5 | 13.0 | -39.6 | 84.5 | 60.6 | -28.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **882.5** | **570.0** | **-35.4** | **3,656.8** | **3,115.7** | **-14.8** |
| எரிபொருள் | 295.0 | 121.8 | -58.7 | 1,313.6 | 1,070.1 | -18.5 |
| இதில் மசகெண்ணெய் | 55.5 | 14.2 | -74.4 | 293.1 | 209.2 | -28.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 239.5 | 84.8 | -64.6 | 898.4 | 734.6 | -18.2 |
| நிலக்கரி | 0.1 | 22.8 | 36380.5 | 122.1 | 126.3 | 3.5 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 16.9 | 1.5 | -91.2 | 64.6 | 27.2 | -57.9 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 219.0 | 146.9 | -32.9 | 907.6 | 768.9 | -15.3 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 32.8 | 29.1 | -11.2 | 136.5 | 120.0 | -12.1 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 16.5 | 18.5 | 12.2 | 61.8 | 69.3 | 12.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 33.5 | 9.0 | -73.2 | 86.8 | 88.8 | 2.3 |
| அடிப்படை உலோகங்கள் | 32.0 | 38.6 | 20.7 | 172.7 | 136.8 | -20.8 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 47.0 | 41.1 | -12.5 | 190.7 | 168.0 | -11.9 |
| இரசாயன உற்பத்திகள் | 66.5 | 64.9 | -2.3 | 273.8 | 255.5 | -6.7 |
| வளமாக்கி | 26.2 | 29.2 | 11.2 | 74.6 | 55.0 | -26.2 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 16.4 | 13.1 | -20.2 | 68.9 | 80.6 | 17.0 |
| கனிம உற்பத்திகள் | 36.8 | 12.4 | (66.2) | 85.5 | 52.4 | (38.7) |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 43.9 | 43.9 | -0.2 | 219.6 | 223.1 | 1.6 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **404.1** | **249.6** | **-38.2** | **1,532.9** | **1,233.4** | **-19.5** |
| பொறி மற்றும் சாதனம் | 209.8 | 113.1 | -46.1 | 848.8 | 685.5 | -19.2 |
| கட்டடப் பொருட்கள் | 101.3 | 65.0 | -35.8 | 477.0 | 359.4 | -24.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 92.6 | 71.3 | -23.0 | 204.9 | 187.4 | -8.5 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.2 | -59.3 | 2.2 | 1.0 | -52.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.9** | **0.5** | **-38.5** | **2.4** | **7.7** | **214.7** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,595.6** | **1,122.6** | **-29.6** | **6,412.5** | **5,625.3** | **-12.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 பரவலின் காரணமாக 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து இலங்கைக்கான அனைத்துப் பயணிகளின் விமானப் பயணங்களும் கப்பல் பயணங்களும் இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக 2020 ஏப்பிறலில் **சுற்றுலாப் பயணிகளின்** வருகைகள் எதுவும் பதிவுசெய்யப்படாமையினால் 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இல் தொடர்பான காலப்பகுதியின் 907,575 உடன் ஒப்பிடுகையில் 507,311 ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

- இவ்வபிவிருத்திகளின் காரணமாக, **சுற்றுலாவிலிருந்தான** ஒன்றுசேர்ந்த **வருவாய்கள்** 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதுடன் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 44.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

- அதேவேளை, 2020 ஏப்பிறலில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** ஐ.அ.டொலர் 375 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 32.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் 2019 தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,975 மில்லியனுக்கு 9.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 ஏப்பிறலில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 90 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் பதிவுசெய்யப்பட்டதோடு 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 451 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தது.

- 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து 2020 மே நடுப்பகுதி வரை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை வர்த்தகத்திற்காக மூடப்பட்டிருந்தமையின் காரணமாக 2020 ஏப்பிறலில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீட்டுப் பாய்ச்சல்கள் எதுவும் காணப்படவில்லை. ஆகவே, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் 2020இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 28 மில்லியனாக விளங்கியது.

- 2020 ஏப்பிறலில் அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் கணக்கின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 137 மில்லியனாகக் காணப்பட்டது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 ஏப்பிறல் இறுதியில் மொத்த அலுவல்சார் **ஒதுக்குகள்** ஐ.அ.டொலர் 7.2 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 10.3 பில்லியனாக விளங்கி 6.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

- கொவிட்-19 தொற்றின் பரவலுடன் 2020 மாச்சு பிற்பகுதியலிருந்து 2020 ஏப்பிறல் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கடுமையான தேய்வு அழுத்தத்திற்குட்பட்டிருந்த இலங்கை ரூபா, அதன் பின்னர், உறுதியடைந்து 2020 மேயில் கணிசமானளவு உயர்வினைப் பதிவுசெய்தது. இப்பின்னணியில், 2020 ஏப்பிறல் 09 அளவில் ஐ.அ.டொலருக்கெதிராக 9.1 சதவீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா அதன் பின்னர் உயர்வடைந்து 2020 யூன் 19ஆம் திகதி வரையான இவ்வாண்டுப்பகுதியில் 2.6 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்தத் தேய்வினைப் பதிவுசெய்தது. 2020 யூன் வரையான இவ்வாண்டுப்பகுதியில் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபா யூரோ, யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் இலங்கை ரூபா, ஸ்ரேர்லிங் பவுண், கனடியன் டொலர் மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 யூன் 22 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -2.7% |
| யூரோ | -12.7% | +2.6% | -2.5% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -11.4% | -2.8% | +3.3% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -4.2% |
| கனேடியன் டொலர் | -9.3% | -3.7% | +1.4% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -0.4% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +4.0% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி